உரிமை மீறிய செயல் என்பது தெளிவாகிறது. எனவே உரிமைக் குழுவுக்கு அனுப்பி இதனை ஆய்ந்து, தக்க மேல் நடவடிக்கைகளுக்காகப் பரிந்துரை வழங்குமாறு கேட்டு பேரவைத் தலைவருக்கு இப்பிரச்சினையில் உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அவை உரிமைக் குழுவுக்கு இப்பிரச்சினையை அனுப்பி வைக்கிறேன்.

5. முன்னாள் உறுப்பினர் ஒருவர் பெயரை பேரவைத் தலைவர் தவறாகக் குறிப்பிட்டதாக 'தினமணி' பத்திரிகை வெளியிட்ட செய்தி குறித்து.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தினமணி பத்திரிகை சம்பந்தமாக (குறுக்கீடு) நேற்றைய தினம் நான் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் நல்லசிவம் என்று முதலில் தெரிவித்த கருத்தை, ஒரு பத்து நிமிடத்திற்குள்ளே வந்து அதை இன்றைய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. நல்லசிவன் அல்ல, அன்றைய சென்னிமலைத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. ஆர். நல்லசிவம் என்று பேரவையிலேயே அறிவித்து விட்டேன். பத்து நிமிடத்துக்குள்ளேயே இரண்டாவது முறையாக பேரவையில் வந்து தெரிவித்த கருத்தை விட்டுவிட்டு நான் முதலில் சொன்ன கருத்தை தினமணி பத்திரிகையில் வெளியிட்டு இருப்பதை ஒரு அவை மீறல் பிரச்சினையாக நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். இருந்தாலும் பத்திரிகைகளுக்கு ஒரு வேண்டுகோளாகவும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பேரவையில் நடைபெறுகின்ற சம்பவங்களை, சமயங்களில் சிலபல சிறு தவறுகள் நேர்ந்திருக்குமேயானால் உடனடியாக வந்து அதை மறுக்கிறபோது அந்த மறுப்பையும் வெளியிடுவது தான் பத்திரிகா தர்மம் ஆகும். எனவே முதலில் தெரிவித்ததை மட்டும் போட்டுவிட்டு இரண்டாவதாக தெரிவித்ததைப் போடாமல் இருப்பது தவறானதாகும். இதைப்போன்ற தவறுகளைத் தவிர்க்குமாறு பத்திரிகையாளர்களை கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் முதலில் நான் தெரிவித்த கருத்து காரணமாக அதைப் போட்டிருக்கிறார்கள். இரண்டாவது, உடனடியாக அதை நான் மறுத்ததைப் போடாமல் இருப்பது தவறுதான். அத்தகைய தவறுகளைத் தவிர்க்குமாறு பத்திரிகையினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 30]

திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுமாதிரி அசம்பாவிதம் ஏற்பட்டு தவறான கருத்துகளை வெளியிட்டுவிட நேர்ந்தால், உடனடியாக மறுநாளே அந்தப் பத்திரிகையில் 'காரிகன்டம்' என்று மறுப்புக் கொடுத்து அந்தத் தவறுகளைத் திருத்திக் கொள்கிறோம் என்று பிரசுரிப்பார்கள். அதுபோன்று இந்தப் பத்திரிகையாளரும் செய்ய வேண்டுமென்று சொல்லி, நான் கண்டனம் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்திருப்பது நியாயமான கோரிக்கை. அதுதான் பத்திரிகா தர்மம் கூட. ஒருமுறை தவறு நேர்ந்திருக்குமானால் அது தவறு என்று தெரிகிற போது மறுப்பையோ அல்லது தவறு ஏற்பட்டுவிட்டது என்பதற்கு வருத்தமோ தெரிவிப்பதுதான் சரி. அத்தகைய வகையில் பத்திரிகையாளர்கள் இந்தப் பிரச்சினையையும் அணுகி நான் இரண்டாவது தெரிவித்தது பற்றியும் நீங்கள் உங்கள் பத்திரிகையில் வெளியிட வேண்டுமென்பதைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) அதற்குப் பிறகு நேற்றைய தினம் தாங்கள் இதை எழுப்பியபிறகு, உடனே நான் கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் திரு. நல்லசிவன் அவர்களைப் பற்றியது அல்ல அந்தப் பிரச்சினை, சென்னிமலை தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் கே. ஆர். நல்லசிவம் என்பதை நேற்றே இந்தப் பேரவைக்கு அறிவித்தேன். இருந்தாலும் இன்றையதினம் உங்களுடைய தலைவர் எனக்குக் கண்டனம் தெரிவித்து ஒரு அறிக்கை போட்டிருக்கிறார். அன்றையதினமே நான் மறுத்ததற்குப் பிறகு எங்கே கண்டனம் வருகிறது என்பதையும் நீங்கள் அவர்களிடம் தெரிவிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-40

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் முதலில் அறிவித்தது, மறுபடியும் திருத்திக்கொண்டு அறிவித்தது, இரண்டும் வெளியிடப்பட்டிருந்தால் இந்தக் குழப்பமான நிலை வந்திருக்காது. அந்த அறிக்கையைப் பார்த்ததற்குப் பிறகு, அதற்கு மறுப்பு அறிக்கை விடக்கூடிய நிலையில் தான்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குப்பிறகு நேற்றும் நான் மறுத்தேன். நேற்று இந்தப் பிரச்சினையை நீங்கள்

முன்னாள் உறுப்பினர் ஒருவர் பெயரை பேரவைத் தலைவர் தவறாகக் குறிப்பிட்டதாக 'தினமணி' பத்திரிகை வெளியிட்ட செய்தி குறித்து.

[பேரவைத் தலைவர்] [1993 ஏப்ரல் 30

கிளப்பி நேற்றும் நான் இன்றைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரைப் பற்றித் தெரிவிக்கவில்லை என்று மறுத்தேன்.

திரு. வே. தம்புசாமி: தலைவர் அவர்களே, அறிக்கை என்பது நேற்றே கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கை இன்றைக்கு பத்திரிக்கையில் பிரசுரமாகி இருக்கிறது, உங்களுடைய அறிவிப்பைப் பார்த்தவுடன் மறுப்பு அறிக்கை வெளியிடப்பட்டது. இரண்டும் வெளியிடப்பட்டிருந்தால் இந்தக் குழப்பத்திற்கு இடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்லது. திரு. முருகையா பாண்டியன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் இங்கே சொல்கிறார்கள், நமது மாண்புமிகு மேலவையின் உறுப்பினர் நல்லசிவன் அவர்கள் என்னுடைய தொகுதியைச் சேர்ந்தவர். அவர் கிட்டத் தட்ட ஐந்து தடவைகள் அந்தத் தொகுதியில் போட்டி யிட்டும் கூட சட்டமன்றத்திற்கு வர முடியாமல் இருந்தவர், எனவே, நல்லசிவம் என்று சொன்னவுடன் எந்த நல்லசிவம் என்று கேட்டேன். ஏனென்றால், சட்டமன்றத்திற்கே வராத, வாய்ப்பு இல்லாத ஒருவர் எப்படி இங்கேயிருந்து சொல்லி இருக்க முடியும் என்று விளக்கத்திற்காக நேற்றே நான் கேட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை அவரே சொல்கிறார். நான் சட்டமன்றத்திற்குப் போகவில்லை என்று அவரே அதைச் சொல்கிறார்.

6. கவன ஈர்ப்பு.

(அ) இராமநாதபுரம் பரமக்குடி நகராட்சி மேலச்சத்திரம் ஆரம்பப்பள்ளி இடிந்த நிலையில் இருப்பது குறித்து,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு: டாக்டர் எஸ். சுந்தரராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ''பரமக்குடி நகராட்சி மேலச்சத்திரத்தி லுள்ள நகராட்சி ஆரம்பப்பள்ளி இடிந்த நிலையில் இருப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை